# முக்தி

[விடுதலை]



ப்ரக்ஞன்

# நூல் விளக்கம்

| | | |
|---|---|---|
| **நூலின் பெயர்** | : | முக்தி |
| **தொகுப்பு** | : | ப்ரக்ஞுன் [prajnan] |
| **மொழி** | : | தமிழ் |
| **வகை** | : | தன்னாட்டம் |
| **முதல் பதிப்பு** | : | 2024 |
| **பக்கங்கள்** | : | 31 |
| **தாள்** | : | A5 (5.83" X 8.27") |
| **எழுத்து அளவு** | : | 12 புள்ளிகள் |
| **கணினி அச்சு** | : | ஓம் கிராபிக்ஸ் |
| **வெளியீடு** | : | பராபரம் |
| **விலை** | : | அக விழிப்பு |

| எண் | பொருளடக்கம் | பக்கம் |
| --- | --- | --- |
| 1. | முகவுரை | 05 |
| 2. | முக்தி | 11 |
| 3. | சரியை | 16 |
| 4. | கிரியை | 18 |
| 5. | யோகம் | 20 |
| 6. | ஞானம் | 22 |
| 7. | முடிவுரை | 28 |

# முக்தி

## (விடுதலை)

ப்ரக்ஞன்

# முகவுரை

பொதுவாக, மனிதர்களின் வாழ்வியல் முறைகள் இரண்டு வழிகளில் இருக்கின்றன. அவைகளை, **லௌகீகம்** மற்றும் **ஆன்மீகம்** என்று கூறலாம்.

அதாவது, மனிதன் தன்னுடைய கண்களுக்குத் தெரிகின்ற புற உடலாகிய ஸ்தூல பௌதீக உடலை மேம்படுத்தும் பொருட்டு, வாழும் வாழ்க்கையை, “**லௌகீகம்**” என்றும், அக உடலாகிய கண்களுக்குத் தெரியாத சூக்கும மனதை மேம்படுத்தும் பொருட்டு, வாழும் வாழ்க்கையை, “**ஆன்மீகம்**” என்றும் அறியலாம்.

இத்தகைய இருவிதமான வாழ்க்கை முறைகளின் வாயிலாக, ஸ்தூல உடலாகிய பரு உடலையும், சூக்கும உடலாகிய மனதையும், நன்றாக வைத்துக் கொள்ள வேண்டுமானால், அவனுக்கு “**கல்வி**” என்பது மிகவும் அவசியமாகின்றது.

படைக்கப்பட்ட பலவகையான சீவர்களில், ஒரு அறிவு தாவரத்தில் தொடங்கி, ஆறு அறிவு கொண்ட மனிதன் வரை, அறிவுப் பரிமாணத்தில், உயர் பரிமாண நிலைக்கு உயர்ந்து

வந்த, மனதைக் கொண்டதினால், அவனை '**மனிதன்**' என்று அழைக்கின்றோம்.

அத்தகைய மகத்தான மனித வாழ்வில், இந்த உடலையும், மனதையும் செம்மைப்படுத்துகின்ற, சிறப்பான சாதனை ஒன்று உண்டென்றால், அதுவே, **கல்வி** எனப்படுகின்றது.

கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர். – திருக்குறள்.

'**கண்**' உடையவர்கள் என்று உயர்வாகக் கூறப் படுவோர் கற்றவரே ஆவர். கல்வி கல்லாதவர்கள் தம் முகத்தில் இரண்டு புண் உடையவர்கள் என்கின்றது.

இதிலே, இன்றைய நவீன கல்வி முறைகளில், மாணவர்களுக்கு போதிக்கப்படுகின்ற பாடத்திட்டங்கள் மனித உடலையும், மனதையும் செம்மைப்படுத்தும் வகையில், இந்த இரண்டையும், சரிசமமாகக் கலந்துக் கொடுக்காமல், பெரும்பாலும் உடலை வளர்க்கும் பொருளாதாரத் தேவைக்கான பாடங்கள் கொண்ட கல்வி முறையாகளாகவே உள்ளன.

அதனால், மனிதன் **லௌகீகம்** சார்ந்த வாழக்கையை வாழ முற்பட்டு, இந்த உடலுக்காகவும், உறவுகளுக்காகவும் ஓடும் ஓட்டத்தின் கூடவே, அவனது, உள்ளத்தை

மேம்படுத்தும், ஆன்மாவை அறியும் உயரிய **ஆன்மீகம்** சார்ந்த வாழ்க்கையையும் வாழ முற்பட வேண்டும்.

இந்த உலகியல் கல்வி முறைகள், ஒன்றாம் வகுப்பில் தொடங்கி, **நடுநிலைக் கல்வி**, **உயர்நிலைக் கல்வி** மற்றும் **மேல்நிலைக் கல்வி** என்று மூன்று வகைகளில் இருக்கின்றது.

அவைகளை, (1) முதல் (5) வகுப்புகள் வரை, நடு நிலைப்பள்ளிகளிலும், (6) முதல் (10) வகுப்புகள் வரை, உயர் நிலைப்பள்ளிகளிலும், (11) முதல் (12) வகுப்புகள் வரை, மேல் நிலைப்பள்ளிகளிலும் படித்து, அதன்பிறகு கல்லூரிகளில் சென்று, மூன்று ஆண்டுகள் படித்து, ஏதேனும் ஒரு துறையில் பட்டம் பெற்றவுடன் ஒரு மாணவனது படிப்பு முடிவடைகின்றது.

அதற்கு மேலேயும் அந்தத்துறைகளில், இன்னும் மேற்படிப்பு படித்து, உயரிய பட்டம் பெறக்கூடிய வகையில், முதுநிலைக்கல்வி முறைகளும் நிறையவே உள்ளன. அதிலே, முனைவர் பட்டம் (Phd) பெறுவதும், இன்றைய நவீனக் கல்வி முறைகளில் நடைமுறையில் உள்ளது.

அதுப்போல, மனிதனின் மனதை மேம்படுத்தி, அதை செம்மைப்படுத்தும் வகையில் உள்ள உயரிய **ஆன்மீகக்கல்வி** என்பது, நம்மிடையே, நான்கு நெறி முறைகளில் நடைமுறையில் உள்ளன.

அவைகளை, **சரியை, கிரியை, யோகம்** மற்றும் **ஞானம்** என்று கூறப்படுகின்றது.

இதையும் சேர்த்து, இன்றைய மனிதன் கற்றுக் கொள்ளும்போது மட்டுமே, மனிதன் என்பதிலிருந்து, **புனிதன்** என்ற நிலையை அவன் அடைய முடிகின்றது.

அத்தகைய, மனதை மேம்படுத்தும் உயரிய ஆன்மீகக் கல்வியானது, **சரியை** என்ற நிலையில், 1 முதல் 5 வரை உள்ள உலகியல் கல்வியைப் போன்று **நடு நிலையிலும்,** கிரியை என்ற நிலையில், 6 முதல் 10 வரை உள்ள உலகியல் கல்வியைப் போன்று **உயர் நிலையிலும்,** யோகம் என்ற நிலையில், 11 ஆம் வகுப்பு முதல், பட்டம் பெறுவது வரை, இந்த உலகியல் கல்வியைப்போல, **மேல் நிலையிலும்** உள்ளது.

ஆக, கற்ற கல்வியினால் ஒருவன் அடையும் உயர் அறிவு என்பது, அவன் எதைக் கற்றானோ? அந்தத் துறையில், அவன் அடையும் '**ஞானம்**' என்ற நிலையில், இந்த உலகியல் கல்வியில் ஒருவன் பெறுகின்ற உயரிய **முனைவர் பட்டம்** (Phd) போன்று, இந்த **ஆன்மவியல்** கல்வியிலும் ஒருவன் முனைவர் பட்டம் (Phd) பெறுவது என்பது, "**ஆன்ம ஞானம்**" அடைவது ஒன்றே ஆகும்.

எவ்வாறு, மனிதன் உலகியல் கல்வியைப் படிப்படியாக, ஒன்றாம் வகுப்பில் தொடங்கி, முனைவர் பட்டம் பெறும்வரை, விடாமல் கற்றுக் கொள்கிறானோ?

அதுப்போலவே, இந்த ஆன்மீகக் கல்வியான, ஆன்மவியல் கல்வியையும், படிப்படியாக, **சரியை, கிரியை, யோகம்** என பயின்றுக் கொண்டு வந்து, அதன் இறுதி நிலையான "**ஆன்ம ஞானம்**" என்பது வரை, அவசியம் கற்றுக் கொள்ள வேண்டும்.

'சரியையிலே ஈசன் சட வடிவாய் நிற்பான்
கிரியையிலே மந்திரத்தில் கிட்டி அருகிருப்பான்
ஊனமில்லா யோகத்தில் உள் ஒளியாய் நிற்பான்
ஞானத்தில் தானாகுவான்!' - திருமந்திரம்.

அத்தகைய, ஆன்மீகக் கல்வியில் உள்ள இந்த நான்கு நெறிமுறை நிலைகளை ஒரு மனிதன் முழுமையாகப் படித்துப் புரிந்துக் கொள்ளும்போது மட்டுமே, அவன் மனிதனில் புனிதன் ஆவதுடன், என்றும் அழியாத அறிவை உணர்கிறான்.

மனிதனின் உலகியல் கல்வியில் உண்டாகும் புற அறிவு என்பது, அவனது உடலையும், உறவுகளையும் காப்பாற்றிக்கொள்ள மட்டுமே, அது கைக்கொடுக்கும். அத்தகைய புறக்கல்வியில், ஒருவன் படித்து முடித்து, ஏதேனும் ஒரு துறையில் முனைவர் பட்டம் (Phd) பெற்றிருந்தாலும், அந்தக்கல்வி அவனது இறப்புக்குப் பிறகு பயன்படாது.

அதுவே, இத்தகைய, அகக்கல்வி முறைகளான, **சரியை, கிரியை, யோகம்** மற்றும் **ஞானம்** என்ற படி நிலைகளில் பயிலும் மாணவன், அவ்வாறு படித்துக் கொண்டிருக்கும் காலத்தில், இதில் எந்த நிலையில், அவனது உடல் விடுபட்டு,

மரணத்தை அடைந்தாலும், அவ்வாறு விட்ட இடத்திலிருந்து, அடுத்தப்பிறவியில், அவனால், இந்தக் கல்வியைத் தொடர முடியும். அதன் இறுதியில் அமரத்துவத்தை அவன் அடைய முடியும்.

அதைத்தான் நமது திருவள்ளுவப் பெருந்தகை தமது திருக்குறளில் கூறுகின்றார்.

ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து.

அதாவது, ஏதேனும் ஒரு பிறப்பில் ஒருவன் கற்றுக் கொண்ட, இந்த ஆன்மவியல் கல்வியானது, அவனது அப்பிறப்பிற்கு மட்டுமல்லாமல், ஏழு பிறப் பிறப்பிலும் உதவும் தன்மை உடையது என்கின்றார்.

அத்தகைய உயரிய “**ஆன்மவியல்**” கல்வியை அடையும் மார்க்கங்களைப்பற்றி, நாம் இந்த நூலில் தெரிந்துக் கொள்ளலாம்.

நன்றி!

என்றும் அன்புடன்,

**ப்ரக்ருன்.**

# முக்தி

முக்திகள் பல வகைப்படும். அவைகளில் வாழும் பொழுதே உயர்ந்த ஞானத்தை அடைந்து, நிலையான ஆனந்தத்தை உண்டாக்குகின்ற ஜீவன் முக்தி நிலை இங்கு மிக உயர்வாகப் பேசப்படுவதற்குக் காரணம் என்னவெனில், சரீரம் எடுத்து பிறக்கின்ற ஜீவர்களில் மனிதன் மட்டுமே அந்த பரமாத்மாவை அறிந்து, அவருடன் இரண்டறக் கலந்து விடுகின்ற உயர் ஞானத்தை அடைய முடியும்.

அந்த ஞானத்திற்கு தகுதி என்பதே, இந்த ஆறறிவைக் கொண்ட **மனித சரீரம்** மட்டுமே ஆகும். மற்ற குறைந்த அறிவைக் கொண்ட சரீரங்களில் வந்த ஜீவர்களுக்கு இந்த தகுதி கிடையாது.

இதில் மனிதன் என்னதான் கர்ம காரியங்களான **பூசை, தியானம், யோகம்** என்று எதைச் செய்தாலும், அதன் வாயிலாக, அவனது மனம் தூய்மையை அடைய முடியுமே தவிர, ஆத்ம ஞானத்தை அடைய முடியாது.

அதுவே, ஒருவன் சத்குருவை அடைந்து, மனித சரீரம் எடுத்ததின் நோக்கத்தை அறிந்து, மகத்தான சாஸ்திரத்தை விசாரித்து, அதன்வாயிலாக தன்னைப் பற்றியும், இந்த

தரணியைப் பற்றியும், தரணிக்கு காரணமான ஈஸ்வரனைப் பற்றியும் உண்டாகின்ற சந்தேகங்கள் தெளிந்து, அதனால் கிடைத்த ஆத்ம ஞானத்தினால் பல பிறவிகளுக்கு காரணமான அறியாமையை நீக்கி, அனைத்து அண்ட சராசரங்களும் தன்னிலிருந்து வேறுபட்டதல்ல என்ற அகண்ட வஸ்துவாக தன் சொரூபத்தை அறிய முடிகின்றது.

அதாவது, **ஜீவன், ஈஸ்வரன்**, இந்த **உலகம்** மூன்றும் ஒன்றே என்ற உயர் ஞானத்தினால், வாழும் பொழுதே இந்த உலகத்தை அனுபவித்து வாழ்கின்ற, ஆனந்த வாழ்க்கை உண்டாகின்றது. இதுவே **ஜீவன் முக்தர்** நிலை. மற்ற முக்திகள் அனைத்தும் இந்த ஜீவன் முக்தர்கள் அடைந்த இந்த ஞானத்திற்குள் அடக்கம்.

மனிதன் தன் மனதை தூய்மையாக்கும் பல்வேறு பாதைகளான **சரியை கிரியை, யோகம், ஞானம்** என்பதில், படிப்படியாக முன்னேறி, இறுதியில், “**ஞானம்**” என்ற நற்பாதைக்கு நடக்கத் தயாரானால் மட்டுமே, அவன் தன் பயண இலக்கை இறுதியாக சென்றடைய முடியும்.

இதில், பல்வேறு பாதைகளில், எந்த ஒரு வழியாகப் பயணத்தை மேற்கொண்டாலும், அந்த பாதைகள் இறுதியில், பயண இலக்காகிய அவனது இருப்பிடம் கொண்டு சேர்க்க வேண்டும் அல்லவா? அதாவது, அவனது வீட்டுக்கு அவன் சென்றடைய முடியாத பயணத்தின் பலன் என்னவாக இருக்க முடியும்?

எனவே, அறியாமைகளால் ஒருவன் அனேக சுற்றுப்பாதைகளில் பலவாறாக சுற்றி, சுற்றி வந்தாலும், சரியான பாதையில்தான் பயணிக்கின்றோமா? என்ற விழிப்புணர்வு இருக்க வேண்டும். இல்லையென்றால், இறுதி இலக்காகிய "**வீடு**" என்கின்ற, அவனது சொந்த வீட்டிற்கு, அவனால் சென்றடைய முடியாமலேயே போய் விடும்.

ஒருவனின் உயர்வுக்கும், தாழ்வுக்கும் அவனது எண்ணங்களால் எழுந்த மனமே காரணமாக இருப்பதினால், அந்த மனதின் மடைமைகளை நீக்கி, உயர் பரிமாணமான புத்தியை உயர்த்தி, மனிதன் புனிதனாக மாற்றக்கூடிய மகத்தான பல நுணுக்கங்களை அகத்தில் அறிந்துக் கொள்கின்ற '**ஆன்மவியல் பாடங்கள்**' அனைவருக்கும் அவசியமாகின்றன.

சரியை நிலை நான்கும், ஒரு கிரியை நிலை நான்கும்
தனி யோக நிலை நான்கும் தனித்தனி கண்டறிந்தேன்

உரிய சிவ ஞான நிலை நான்கும் அருள் ஒளியால்
ஒன்றொன்றா அறிந்தேன் மேல் உண்மைநிலை பெற்றேன்

அரிய சிவ சித்தாந்த வேதாந்த முதலாம்
ஆறந்த நிலை அறிந்தேன் அப்பால் நின்றோங்கும்

பெரிய சிவ அனுபவத்தால் சமரச சன்மார்க்கம்
பெற்றேன் இங்கு இறவாமை உற்றேன் காண் தோழி.!

(அனுபவமாலை) – வள்ளலார்.

ஆன்ம இலாபம் அடைவதற்கு ஆன்மீக அருளாளர்கள் காட்டிய படிகள் பதினாறு. (16).

அவைகள், **சரியை கிரியை யோகம் ஞானம்** என்னும் வரிசையில், ஒவ்வொன்றிலும் நான்கு படிகள் உள்ளன.

சரியையில் சரியை
சரியையில் கிரியை
சரியையில் யோகம்
சரியையில் ஞானம்

கிரியையில் சரியை
கிரியையில் கிரியை
கிரியையில் யோகம்
கிரியையில் ஞானம்.

யோகத்தில் சரியை
யோகத்தில் கிரியை
யோகத்தில் யோகம்
யோகத்தில் ஞானம்

ஞானத்தில் சரியை
ஞானத்தில் கிரியை
ஞானத்தில் யோகம்
ஞானத்தில் ஞானம்

என்னும் 16 படிகள் உள்ளன.

**சரியை** - தாதமார்க்கம் (தாச மார்க்கம்)

**கிரியை** - சற்புத்திர மார்க்கம்

**யோகம்** - சகமார்க்கம்

**ஞானம்** - சன்மார்க்கம்.

## **சரியை**

சரியை என்பது ஆன்மவியல் பாடங்களில் சாதிக்க நினைக்கும் சாதகனின் முதலாவது படியாகக் கூறப்படுவதாகும். இதிலே, இறைவன் தலைவனாகவும், இவன் அவருக்கு தொண்டனாகவும் இருப்பான். அன்பின் துணையோடு உடம்பினால் செய்யும் இறைபணிகள் அனைத்தும் **சரியை** நெறியாகும்.

எளிதாகச் செய்யக்கூடிய ஆரம்ப முயற்சியான இதற்குத் தூய தெய்வீகப் பணியில், மனம் இறைவன் மீது, அன்பு கொண்டு, இருமைகளில் பக்தி செய்யும்.

அது எவ்வாறெனில், ஆலயங்களில் இறைவனை வழிபடல், வழிபாட்டின் பொருட்டுத் திருக்கோயிலைக் கூட்டுதல், மெழுகுதல், கழுவுதல், திருவிளக்கு ஏற்றல், திருநந்தவனம் அமைத்தல்,பூ எடுத்தல், பூமாலை தொடுத்தல், இறைவன் புகழ் பாடுதல், சேவை செய்தல், பழங்கோயில்களை புதுப்பித்தல், புராணங்களைப் படித்தல், கேட்டல், யாத்திரை செய்தல் ஆகியவைகள் யாவும் சரியையில் அடங்கும்.

**சரியையில் சரியை** - உழவாரப்பணிகள் (தொண்டுகள்.)

**சரியையில் கிரியை** - விரும்பும் மூர்த்தியை பூசித்தல்.

**சரியையில் யோகம்** - அந்த மூர்த்தியை தியானித்தல்.

**சரியையில் ஞானம்** - இறைவனைப்பற்றி அறிதல்.

இறைவனின் உருவடிவம் ஒன்றினையே பொருள் என உணர்ந்து இயற்றப்படும் வழிபாடு '**சரியை**' எனப்படுகின்றது.

இதனால், இறையுலகத்தில் உள்ள இன்பங்களை நுகர்ந்து வாழுதல் என்ற "**சாலோகம்**" உண்டாகின்றது. இது "**பதமுக்தி**" எனப்படும்

## கிரியை

கிரியை என்பது, ஆன்மவியல் பாடங்களில் சாதிக்க நினைக்கும் சாதகனின் இரண்டாவது படியாகக் கூறப்படுவதாகும்.

இதிலே, இறைவன் இவனுக்கு தந்தையாகவும், இவன் அவருக்கு மகனாகவும் இருப்பான்.

பூசித்தல் வாசித்தல் போற்றல் செபித்திடல்
ஆசற்ற நற்றவம் வாய்மை அழுக்கின்மை
நேசித்திட் டன்னமும் நீர்சுத்தி செய்தல் மற்(று)
ஆசற்ற சற்புத்திர மார்க்கமாகுமே. – திருமந்திரம்.

மந்திர தந்திரங்களைத் தக்க குருவின் மூலமாக அறிந்து சமய, விஷேட, நிர்வாண தீட்சைகளைப் பெற்றுக்கொண்டு, மேற்கொள்ளும் வழிபாட்டு முறைகள் **கிரியை** நெறியாகும்.

தன்னுடைய பொருட்டு தன்னளவில் செய்யும் பூசைகள், மற்றும் பிறர் பொருட்டு ஆலயங்களில் செய்யப்படும் பூசைகளும் இந்நெறியுள் அடங்கும்.

இதிலே, மந்திரங்களை ஓதுவது, திருமலர்கள், திருமஞ்சனம் முதலியவற்றால் ஒப்பனை, தூபம், தீபம், உபசாரங்களை ஏற்படுத்தல், கோவிலை வலம் வருதல், மற்றவர்களைப் பணிதல், இறைவனை தோத்திரம் செய்தல் போன்ற இவ்வகைத் தொண்டே கிரியை ஆகும்.

**கிரியையிற் சரியை -** பூசைப் பொருட்களைத் திரட்டல்.

**கிரியையிற் கிரியை -** புறத்தில் பூசித்தல்.

**கிரியையில் யோகம் -** அகத்தில் பூசித்தல்.

**கிரியையில் ஞானம் -** மேற்கூறிய கிரியைகளால் ஓர் அனுபவம் வாய்க்கப் பெறுதல்.

ஒன்றினையே பொருள் என உணர்ந்து அகம்புறம் இரண்டாலும் இயற்றப்படும் வழிபாடு '**கிரியை**' எனப்படுகின்றது.

இதனால், இன்பத்தோடு ஒரு புதல்வனை போல இறைவன் அருகில் அமரும் நிலை "**சாமீபம்**" உண்டாகிறது. இது "**பதமுக்தி**" எனப்படும்

# யோகம்

யோகம் என்பது, ஆன்மவியல் பாடங்களில் சாதிக்க நினைக்கும் சாதகனின் மூன்றாவது படியாகக் கூறப்படுவதாகும்.

சரியை, கிரியை ஆகிய இந்த இருநெறிகளை விட மேலானதாக இந்நெறி சாஸ்திர நூல்களில் கூறப்படுகின்றது.

இதிலே, இறைவன் நண்பனாகவும், இவனும் அவருக்கு இணையான தோழனாகவும் இருப்பான்

இதற்கு இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி ஆகிய அட்டாங்க யோக உறுப்புக்கள் உள்ளன.

இவ்வட்டாங்க யோகங்களிலும் பயிற்சி பெற்று படிப்படியாகத் தேறியவரே யோக நெறியை அனுசரிக்க முடியும்.

இதனை யோகியரிடம் பயின்ற திடசித்த முடையவர்களே அனுட்டித்து ஈடேற முடியும்.

**யோகத்தில் சரியை** - இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம்.

**யோகத்திற் கிரியை** - பிரத்தியாகாரம், தாரணை.

**யோகத்தில் யோகம்** - தியானம்.

**யோகத்தில் ஞானம்** - சமாதி.

பக்தன் தன் வெளித்தோற்றம் துறந்து உள்ளடங்கி, இறைவனின் **அருவம்** ஒன்றினையே பொருள் என உணர்ந்து இயற்றப்படும் வழிபாடு '**யோகம்**' எனப்படுகின்றது.

இதனால், இறைவனைப் போன்று உருவந்தாங்கி இன்பம் நுகரும் நிலை "**சாரூபம்**" உண்டாகின்றது. இதுவும் "**பதமுக்தி**" என்றே அழைக்கப்படும்.

## ஞானம்

ஞானம் என்பது, ஆன்மவியல் பாடங்களில் சாதிக்க நினைக்கும் சாதகனின் நான்காவது படியாகக் கூறப்படுவதாகும்.

இதிலே, இறைவனும், இவனும் ஒன்று.

இருமைகள் அற்ற நிலை. இந்நிலையில், மனம் “**இருப்பதெல்லாம் இறைவனே**” எனும் உயரிய நிலையில் எல்லாவற்றிலும் தன்(இறைவ)னைப் பார்த்தல்.

இந்த ஞானமானது, ஒன்றேயாகிய ஏகனை எல்லாவற்றிலும் கண்டு இன்புறுகின்ற, ஆன்மாவாகிய தன்னை உருவம், அருவம், அருவுருவம் ஆகிய மூன்று திருமேனிகளையும் கடந்து சச்சிதானந்தப் பிழம்பாய் நீக்கமற எங்கும் நிறைந்திருக்கும் நிலையில், அறிவை அறிந்த அறிவால் வழிபடுதலாகும்.

கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடல் என்னும் நான்கு அங்கங்கள் இந்நெறிக்கு உண்டு.

## முக்தி

முந்தைய மூன்று நெறிகளிலும் நின்று, பக்குவம் பெற்ற சாதகனை இறைவனே சத்குரு வடிவிலே வந்து, அவனை ஆட்கொண்டு, உபதேசம் செய்து ஞானத்தை அளித்து முத்தியை நல்குவார்.

**ஞானத்திற் சரியை** - ஞானநூல்களைக் கேட்டல்.

**ஞானத்திற் கிரியை** - ஞானநூல்களைச் சிந்தித்தல்.

**ஞானத்தில் யோகம்** - ஞானநூல்களைத் தெளிதல்.

**ஞானத்தில் ஞானம்** - ஞான நிட்டை கூடல்.

சாஸ்திரம் ஆராய்ந்து அவற்றின் சாரத்தை, சரியான சத்குருவினிடம் கேட்டு, கேட்டவற்றைப் பற்றி, சிந்தித்து தெளிந்து, தெளிந்ததை மேற்கொண்டு, ஞானம் (அறிவு) ஞாதா (அறிபவன்), ஞேயம் (அறிபடுபொருள்) என இவற்றையும் கடந்து, இரண்டற்ற அந்த ஏக பரம்பொருளுடன் ஒன்றாகக் கலத்தல். அதுவே, '**ஞானம்**' எனப்படுகின்றது.

'**ஞானம் ஈசன்பால் அன்பே என்றனர்**' - பெரியபுராணம்

இதனால், இறைவனோடு இரண்டறக் கலந்து, அவனும், இவனும் ஒன்றாக இருந்துக்கொண்டு, இணைப்பிரியாது அவனை பற்றும் நிலையில் "**சாயுஜ்ஜியம்**" உண்டாகின்றது.

முக்தி

ஞானமானது **கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிஷ்டை** என நால்வகைப்படும். இவற்றை கடைபிடிக்க **பரமுத்தி** கிடைக்கும். இந்த **பரமுக்தி** ஒன்றே உயரிய முக்தியாகக் கூறப்படுகின்றது.

இந்த நால்வகை மார்க்கங்களையும், **அரும்பு, மலர், காய், கனிக்கு** ஒப்பிட்டு விளக்கியவர் தாயுமானவர்.

'விரும்பும் சரியை முதல் மெய்ஞானம் நான்கும்
அரும்பு மலர் காய் கனிபோல் அன்றோ'- தாயுமானவர்.

| **பாதைகள்** | **உறவுகள்** | **பதவிகள்** | **நிலைகள்** | **உவமை** |
|---|---|---|---|---|
| சரியை | தாஸமர்க்கம் | சாலோகம் | பதமுக்தி | அரும்பு |
| கிரியை | சற்புத்திரமார்க்கம் | சாமீபம் | பதமுக்தி | மலர் |
| யோகம் | சகமார்க்கம் | சாரூபம் | பதமுக்தி | காய் |
| ஞானம் | சன்மார்க்கம் | சாயுஜ்ஜியம் | பரமுக்தி | கனி |

இந்த முக்தி நிலைகள் நான்கைப் பற்றியும் சிவவாக்கியர் தமது **சிவவாக்கியம்** என்ற நூலில் பின் வருமாறு கூறுகிறார்.

"தெளிந்த நற் சரியை தன்னில் சென்று சாலோகம் பெறும்
தெளிந்த நற் கிரியை பூசை சேரலாம் சாமீபமே
தெளிந்த நல் யோகம் தன்னில் சேரலாகும் சாரூபம்
தெளிந்த ஞானம் நான்கிலும் சேரலாம் சாயுச்யமே"

– சிவவாக்கியர்.

வள்ளலார் இதைப்பற்றிக் கூறும்போது, இங்கு கூறப்பட்ட பதினாறு (16) படிகளில் பயணித்துச் சென்று பரம்பொருளின் அருளைப் பெறுவதற்கு, நமக்கு காலம், நேரம் போதாது. அதற்குள், இந்த உடலுக்கு மரணம் வந்துவிடும்.

ஞானத்தில் சரியை என்பதில், தொடங்கி, ஞானத்தில் கிரியை, ஞானத்தில் யோகம், ஞானத்தில் ஞானம் என்னும் நான்காவது படியில் கடவுளைக் கண்டு, அவன் அருளைப் பெற்று மரணத்தை சுலபமாக வென்று விடலாம் என்கிறார்.

அதிலே,

1. *ஞானசரியை என்பது இந்திரிய ஒழுக்கம்.
2. *ஞானகிரியை என்பது கரண ஒழுக்கம்.
3. *ஞானயோகம் என்பது ஜீவ ஒழுக்கம்.
4. *ஞானத்தில் ஞானம் என்பது ஆன்ம ஒழுக்கம்.

இதிலே, அவர் முதலில் கூறும், இந்திரிய ஒழுக்கம் என்பது, புறப்புறக் கருவிகளான கண், காது, மூக்கு, வாய், கை, கால் எனும் உடம்பைக் கொண்டு, செய்யக்கூடிய மகத்தான பல சாதனைகளான பூசைகள், சேவைகள், ஜப, தபங்கள் போன்றவைகள் வாயிலாக, மனதை தூய்மையாக்கும் செயல்களைச் செய்வது.

இரண்டாவது ஒழுக்கமாகிய கரண ஒழுக்கம் என்பது, புறத்திலே அலைப்பாய்ந்துக் கொண்டிருக்கின்ற மனதை, அகத்திலே திருப்பி, புத்தியைக் கொண்டு, மனதை விசாரித்து,

தன்னை இறைவனுக்கு வேறாகப் பிரித்து வைத்துக் கொண்டு, ஜீவாத்மா என்றும், இறைவனை பரமாத்மா என்றும் கூறும், இருமைகளில் சிக்கிக்கொண்டுள்ள பேதமை புத்தியை அறிந்துக்கொள்ள வேண்டுமானால், அந்த அறிவை அறியும் **ஆன்மவியல்** பாடங்களை தக்க சத்குருவின் வாயிலாகப்படித்து, தெளிந்து, அவ்வாறு கற்றவற்றில் மனம் நிஷ்டைக்கொண்டு, தன்னை அந்த அறிவாக அறிந்துக் கொள்ளும் உயர் ஞானம் ஆகும். இதுவே, "**சத்விசாரம்**" எனப்படும்.

மூன்றாவதாகக் கூறப்படும், ஜீவ ஒழுக்கம் என்பது, ***மனம், புத்தி, சித்தம்,*** **அகங்காரம்** என்னும் கருவிகளைக் கொண்டு, ஆராய்ந்து அறிந்துக்கொண்ட அந்த அறிவு (சிவம்) விளங்கும் சித்சபையில், திருநடனம் புரியும் மனதை (சக்தி) இடைவிடாது, அந்த சத்தில் நிலையாக நிறுத்துவதே ஆகும்.

'எண்ணா யிரத்தாண்டு யோகம் இருக்கினும்
கண்ணார் அமுதினைக் கண்டறி வாரில்லை
உள்நாடி உள்ளே ஒளிபெற நோக்கினாற்
கண்ணாடி போலக் கலந்து நின்றானே' – திருமந்திரம். 603

அடுத்து, நான்காவது ஆன்ம ஒழுக்கம் என்பது, இது எப்படியெனில், ஆன்ம ஒளி எனும் அறிவு ஒளியைக்காட்ட, புறத்திலுள்ள சூரிய ஒளி, சந்திர ஒளி, தீப ஒளி போன்ற வெளிச்சங்களால், என்னை எனக்குக் காட்டிக் கொடுக்க முடியாது.

அனைத்தையும் நாம் அறிந்துக் கொள்வது என்பது, “**நான் இருக்கிறேன்**” என்ற **ஆன்ம ஒளி** அறிவுப்பிரகாசத்தால் தான்.

ஆகவே, என்னுடைய பேருணர்வே என்னை எனக்கு காட்டிக் கொடுக்கின்றது. அதுவும் “**நான் இருக்கிறேன்**” என்று என்னை எனக்குக் காட்டுகிறது.

**அது ஒரு உணர்வு வெளி அனுபவம்!**

"நானே உணர்வு வெளியாக எங்கும், எதிலும் நீக்கமற ஆகாசம் போன்று நிறைந்திருக்கிறேன்". ஆக, என்னுடைய இருப்பு எல்லாமாக இருக்கிறது. எனக்கு வேறாக எதுவுமே இல்லை. ஆகவே, **காண்பவன், காட்சி, காணப்படுபவைகள்** எல்லாம் நானே. இதை அறிவதே அறிவு.

அந்த அறிவே நான். இதுவே, ஆன்ம ஒழுக்கம்.

இதிலிருந்து, நாம் முக்கியமாகத் தெரிந்து கொள்வது யாதெனில்?

உண்மைக் கடவுள் ஒருவரே! அவர்தான் அருட்பெருஞ் ஜோதி ஆண்டவர் ஆகிய **அறிவு ஒளி** என்பதைக் கண்டு, அதிலேயே இலயித்து ஆனந்தமாக இருப்பது ஒன்றே, “**ஆன்ம அனுபூதி**” ஆகும்.

# முடிவுரை

அத்தகைய உள் ஒளியான **ஆன்ம ஒளி** என்ற அறிவு ஒளி எங்கும், எதிலும் உருவ பேதம் இல்லாமல், ஒரு அறிவு முதல் ஆறு அறிவு வரை எல்லாவற்றிலும் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது.

அதனுடைய அறிவுப்பிரகாசம் பிரகாசிப்பதில் ஏற்படும் வேறுபாடுகள் என்பது, படைக்கப்பட்ட சீவர்களின் உடல்களைப் பொருத்தே, அந்த ஏக அறிவு பிரகாசிப்பதில், ஒரு அறிவு முதல் ஆறு அறிவு வரை, ஏற்றத்தாழ்வுகளுடன் காணப்படுகின்றதே தவிர, அது எல்லோருக்குள்ளும் ஒரேத்தன்மை உடையதாகவே உள்ளது.

நாம் இந்த மனிதப்பிறவி எடுத்ததின் நோக்கம், இறைவன் நமக்குக் கொடுத்தருளிய இந்த உடல், அதன் புறக்கரணங்கள், அந்தக்கரணங்கள், அதன் மூலம் உண்டாகும் உலகம், அதிலுள்ள நுகர்வுப் பொருட்கள் ஆகியவற்றைக் கொண்டு, இறைப்பணி நின்று, முக்தி அடைவதே ஆகும்.

முத்தியடைவதற்கு ஒரே வழி மெய்யுணர்வாகிய ஞானத்தைப் பெறுதல் வேண்டும். அந்த ஞானத்தைப் பெறுவதற்குச் சாதனமாக **சரியை, கிரியை, யோகம்** என்பவற்றைக் கொண்டு, அவைகளைப் படிப்படியாகப்

பயின்று, முக்தியில் நாட்டமுடையவர்கள் இவற்றுள் எதனைப் பின்பற்றி ஒழுகினாலும், அது முடிவிலே ஞானத்துக்கு கொண்டுச் சென்று சேர்க்கும்.

இந்தப் பிறவில், சிலர் எடுத்த எடுப்பிலேயே ஞானத்திற்கு வருகின்றார்கள் என்றால், அவர்கள் முற்பிறவியிலேயே, இதன் முந்தைய பயிற்சிகளில் ஈடுபட்டு, இந்த உடலை விட்டவர்கள் என்பது ஆகும்.

அதிலே, அந்த ஏக இறைவனோடு இரண்டறக் கலத்தலாகிய **பரமுக்தி** ஒன்றே பிறவாப் பெரு நிலையை நல்கும். அதனை அனைத்து மகான்களும் படிப்படியாக முயன்று அடைந்தனர் என்பதே உண்மை.

அத்தகைய உயர் ஞானத்தை நாம் ஒரு கனிக்கு ஒப்பிட்டால், சரியையை **அரும்பு** என்றும், கிரியையை **மலர்** என்றும், யோகத்தைக் **காய்** என்றும் கூறலாம்.

அரும்பாகத் தோன்றியது, இடையூறுகள் ஒன்றும் ஏற்படுத்தாது இயல்பாக விட்டால், அது படிப்படியாக வளர்ச்சியடைந்து கனியாக மறுவது இயல்பு.

அதுப்போல, சரியை நெறியில் சரியாக நிற்கின்ற சாதகர்கள் விரைவில் ஒவ்வொரு படியாக ஏறும்போது, இறுதியில், **ஞானம்** என்ற நிலைக்கு உயர்வார்கள்.

அது அவரவர்கள் முயற்சிக்கும் முயற்சியின் தீவிரம், அதி தீவிர நிலைக்கு ஏற்றவாறு சரியை நெறியைக் கடந்து கிரியை, யோகம் மற்றும் ஞானம் என உயருகின்றார்கள்.

அவ்வாறு, படிப்படியாக பக்குவம் அடைந்து ஞானத்தைப் பெற்ற பின்பு, அவர்கள் முடிவிலே மேலான **வீடுபேற்றை** அடைவது உறுதி.

**சரியை கிரியை யோகம் ஞானம் - விளக்கம்**

| → | சரியை (தாத(ச) மார்க்கம்) | கிரியை (சற்புத்திர மார்க்கம்) | யோகம் (சக மார்க்கம்) | ஞானம் (சன்மார்க்கம்) |
| --- | --- | --- | --- | --- |
| **சரியை (தாத (ச) மார்க்கம்)** | உழவார பணிகள் (தொண்டுகள்) | விரும்பும் மூர்த்தியை பூசித்தல் | பூசித்த மூர்த்தியை தியானித்தல் | இறைவனை பற்றி அறிதல் |
| **கிரியை (சற்புத்திர மார்க்கம்)** | பூசை பொருட்களை திரட்டல் | புறத்தில் (வெளிமுகமாக) பூசித்தல் | அகத்தில் (உள்முகமாக) பூசித்தல் | செய்த கிரியைகளால், அனுபவம் வாய்க்க பெறல் |
| **யோகம் (சக மார்க்கம்)** | யமம், நியமம், ஆசனம், பிராணாயாமம் | பிரத்தியாகாரம், தாரணை | தியானம் | சமாதி |
| **ஞானம் (சன்மார்க்கம்)** | ஞானநூல்களைக் கேட்டல் – இந்திரிய ஒழுக்கம் | ஞானநூல்களைச் சிந்தித்தல் – கரண ஒழுக்கம் | ஞானநூல்களைத் தெளிதல் – ஜீவ ஒழுக்கம் | ஞான நிட்டை கூடல் – ஆன்ம ஒழுக்கம் |

ஓம் தத் ஸத்!



முத்தியடைவதற்கு ஒரே வழி மெய்யுணர்வாகிய உயர் ஞானத்தைப் பெறுதல் வேண்டும். அந்த ஞானத்தைப் பெறுவதற்குச் சாதனமாக சரியை, கிரியை, யோகம் என்பவற்றைக் கொண்டு, அவைகளைப் படிப்படியாகப் பயின்று, முக்தியில் நாட்டமுடையவர்கள் இவற்றுள் எதனைப் பின்பற்றி ஒழுகினாலும், முடிவிலே அவர்களை ஞானத்துக்கு கொண்டுச் சென்று சேர்க்கும்.